பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 05 2025 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

- மீன் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

- கேலோ இந்தியா இயக்கத்தின்கீழ் வருடாந்திர அட்டவணையை மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் வெளியிட்டார்.

- ஹைதராபாத் தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 17-ஆக அதிகரித்துள்ளது.

- ஆசிய கோப்பை **Sepak Takraw** போட்டியில் இந்தியா 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<<<>>>>>**

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலத்தின் **Mehsana** மாவட்டத்தில் உள்ள செவிலியர் கல்லூரியில் புதிய வளாகத்தை திறந்துவைத்து அவர் பேசினார்.

இந்த புதிய வளாகத்தின்மூலம் இப்பகுதியை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த ஏழைகள் பயனடைவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் எயிம்ஸ் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 7-ல் இருந்து 23-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

**<<<<<<<>>>>>**

வேளாண் விஞ்ஞானிகள் மேற்கொள்ளும் ஆராய்ச்சியின் பலன்கள் விவசாயிகளிடம் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாக்பூரில் விவசாயிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழும விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் விரிவாக்க மைய அலுவலர்கள் கிராமங்களுக்கு நேரடியாக சென்று விவசாயிகளுக்கு புதிய கண்டுபிடிப்புகள் குறித்தும், ஆராய்ச்சிகள் குறித்தும் விளக்கம் அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வேளாண் துறையில் மேற்கொள்ளப்பட்ட புதுமை கண்டுபிடிப்புகள் குறித்தும் எடுத்துரைக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

வேளாண் உற்பத்தி மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர், நோயற்ற மரக்கன்றுகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தரமான விதைகள், மண் பரிசோதனை மற்றும் குறைந்த செலவிலான சாகுபடி பணிகள் போன்றவை குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>

கடல்சார் துறையில் மகளிர் பங்களிப்பு அதன் வளர்ச்சியை உறுதி செய்யும் என்று கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் இதுதொடர்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

கடல்சார் துறையில் மகளிர் படைத்த சாதனைகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விவாதிப்பதற்காக இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

மீன் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

திரிபுராவின் முதலாவது ஒருங்கிணைந்த கடல்சார் பூங்கா மற்றும் மீன் திருவிழாவை அகர்தலாவில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மீன் உற்பத்தியில் திரிபுரா சுயசார்பினை எட்டுவதற்கு இந்த ஒருங்கிணைந்த பூங்கா உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் 96 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி, தற்போது 184 லட்சம் டன்னை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>

மருந்து உற்பத்தியில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாக இந்த துறை சராசரியாக பத்து புள்ளி பூஜ்யம் எட்டு சதவீத வளர்ச்சியை கண்டுவருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குறைந்த செலவில் தடுப்பூசிகளை உலகிற்கு வழங்குவதில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையர் டாக்டர் விவேக் ஜோஷி, மூன்றாவது நாளாக இன்றும் ஆய்வு மேற்கொண்டார்.

நேபாளத்தையொட்டிய எல்லைப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர், பாதுகாப்புப்படை உயரதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினார்.

அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளிலும் அவர் ஆய்வு மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, ஐக்கிய ஜனதாதள கட்சியின் முன்னாள் தலைவர் திரு ஆர் சி பி சிங், பிரசாந்த் கிஷோர் தலைமையிலான ஜன் சுராஜ் கட்சியில் இணைந்தார்.

அவரது தலைமையிலான **Aasa** கட்சியும், ஜன் சுராஜ் கட்சியுடன் இணைந்துள்ளதாக திரு ஆர் சி பி சிங் கூறியுள்ளார்.

இதன்மூலம், பீகாரில் தமது கட்சி மேலும் வலுவடைந்துள்ளதாக திரு பிரசாந்த் கிஷோர் கூறியுள்ளார்.

**<<<<<<<>>>>>>**

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத் தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 17-ஆக அதிகரித்துள்ளது.

சார்மினார் அருகே உள்ள குடியிருப்புப்பகுதியில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் ஆறு பேர் பெண்கள் என்றும், எட்டு பேர் 7 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும், தரை தளத்தில் ஏற்பட்ட தீ, பின்னர் முதல் மாடிக்கும் பரவியதாக தீயணைப்புத்துறையினர் தெரிவித்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்ட மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றார்.

இந்த விபத்து குறித்து குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக்கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் குடியரசுத் தலைவர் தமது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவியும் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தியும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா அரசு சார்பில் தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 14 கேள்விகளை எழுப்பி உச்சநீதிமன்றத்துக்கு அனுப்பிய குறிப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்குமாறு பிஜேபி ஆட்சிப்பொறுப்பில் இல்லாத மாநிலங்களின் முதலமைச்சர்களை தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, மேற்குவங்கம், கர்நாடகா, இமாச்சலப்பிரதேசம், தெலங்கானா, கேரளா, ஜார்கண்ட், பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இக்கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

மாநில சுயாட்சியை பாதுகாக்க உறுதிபூண்டுள்ள அரசுகள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அக்கடிதத்தில் கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>

பகுஜன் சமாஜ் கட்சியின் முதன்மை தேசிய ஒருங்கிணைப்பாளராக திரு ஆகாஷ் ஆனந்த் அறிவிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் உயர்நிலைக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த அக்கட்சியின் மூத்த தலைவர் திரு விஜய் பிரதாப், **BSP** மேலும் வலுவடைய இந்த நடவடிக்கை உதவிடும் என்று குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் கேலோ இந்தியா இயக்கத்தின்கீழ் வருடாந்திர அட்டவணையை வெளியிட்டு அவர் பேசினார்.

விளையாட்டுத்துறையில் இந்தியாவை வல்லரசாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே இந்த அட்டவணை வெளியிடப்பட்டிருப்பதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<<>>>>>

கர்நாடகாவையொட்டி, அரபிக்கடல் பகுதியில் வரும் வியாழக்கிழமை குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது வடக்கு திசையில் நகர்ந்து வலுப்பெறக்கூடும் என்றும், இதன் காரணமாக மகாராஷ்ட்ராவில் மழையின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மகாராஷ்ட்ரா மற்றும் கொங்கன் பகுதிகளில் நாளை தொடங்கி, வரும் 25-ஆம் தேதிமுதல், கன முதல் மிககனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்ட்ரா மற்றும் கோவா கடல்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை **Sepak Takraw** போட்டியில் இந்தியா 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர், இரட்டையர் மற்றும் குழு பிரிவுகளில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

---------------

பிரான்சில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-19, 21-15 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Shriyanshi Valishetty** –ஐ வென்றார்.

------------------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

அருணாச்சலப்பிரதேசத்தின் **Yupia**–வில் இன்னும் சற்றுநேரத்தில் இப்போட்டி தொடங்க உள்ளது.

-------------

பக்ரைன் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா, ஐந்து தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ruthick Ragupathi** தங்கப்பதக்கத்தையும், **Hardik Makkar** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியா மூன்று தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

**<<<<<<<END>>>>>**